With Best Compliments
HEARING AIDS

SIEMENS
Hearing Instruments
Authorised Hearing Care Centre
JAGADISH HEARING AIDS
No.3, Kutchery Road, Mylapore, Chennai-4.
24640968 / 9444851663

# MYLAI EXPRESS
Neighbourhood Newspaper
Read our PAPER @ www.mylaiexpress.com
Free Circulation


For online Flute & Vocal Music Classes
Ct: hemflute@gmail.com

VOL - 7 ISSUE - 34 Office:9840643902/49574279 e-mail: mylaiexpress1@gmail.com Jan 26- Feb 1, 2018

## PHONE CALLS WHILE FLYING TO BE AVAILABLE SOON

Soon flyers in India as well as those flying over the country be able to make voice calls and remain connected to the internet even on board an aircraft and the Telecom Authority of India on January 19th recommended allowing in-flight connectivity in Indian airspace. Currently flyers are not allowed to use mobile phones and internet within airspace because of security concerns. With the latest TRAI recommendation ,flyers will be able to check emails, send and receive whatsAPP messages and post statuses and photos on social networking sites.



## ROAD SAFETY INDEX CHENNAI TOPS THE LIST- GOT AWARD

A comprehensive road safety index rating of 10 cities was taken as part of India Road Safety mission after considering key parameters such as traffic control, safety of people, pedestrian rights, lighting and maintenance, heavy vehicle management and cleanliness. The Greater Chennai Traffic Police was awarded the Best City –Motor Laws and Traffic control said a note. The award presented by Union Minister of Road Transport Nitin Gadkari.

## தமிழக அரசு பஸ் கட்டணம் உயர்வு

தமிழகத்தில் அரசு பஸ் கட்டணம் திடீரென்று உயர்த்தப்பட்டு உள்ளது. குறைந்தபட்ச கட்டணம் ரூ.3-ல் இருந்து ரூ.5 ஆக அதிகரிக்கப்பட்டு உள்ளது. கடைசியாக 2011-ம் ஆண்டு நவம்பர் 18-ந்தேதி பஸ் கட்டணத்தை தமிழக அரசு உயர்த்தியது. இந்த நிலையில் 6 ஆண்டுகளுக்கு பிறகு திடீரென்று அரசு பஸ் கட்டணம்உயர்த்தப்பட்டது. இதுவரை சென்னை அல்லாத பிற மாவட்டங்களில் இயக்கப்பட்ட நகர, மாநகர பஸ்களில் (1 முதல் 20 நிலை வரை) குறைந்தபட்ச கட்டணம் ரூ.3 ஆகவும், அதிகபட்ச கட்டணம் ரூ.12 ஆகவும் இருந்தது. அந்தவகை பஸ்களில் குறைந்தபட்ச கட்டணம் ரூ.5 ஆகவும், அதிகபட்ச கட்டணம் ரூ.19 ஆகவும் உயர்த்தப்பட்டு இருக்கிறது. சென்னையில் இயக்கப்படும் பஸ்களில் குறைந்தபட்ச கட்டணம் ரூ.3 ஆகவும், அதிகபட்ச கட்டணம் ரூ.14 ஆகவும் இருந்தது. இனிமேல் குறைந்தபட்ச கட்டணம் ரூ.5 ஆகவும், அதிகபட்ச கட்டணம் ரூ.23 ஆகவும் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. இதேபோல் வால்வோ பஸ்களில் குறைந்தபட்ச கட்டணம் ரூ.15-ல் இருந்து ரூ.25 ஆகவும், அதிகபட்ச கட்டணம் ரூ.100-ல் இருந்து ரூ.150 ஆகவும் உயர்த்தபட்டு உள்ளது. வெளியூர்களுக்கு செல்லும் (புறநகர்) பஸ் கட்டணத்தை பொறுத்தமட்டில், சாதாரண பஸ்களில் 10 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்வதற்கான குறைந்தபட்ச கட்டணம் தற்போதுள்ள 5 ரூபாயில் இருந்து 6 ரூபாயாக அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. 30 கி.மீ தூரம் பயணம் செய்தவற்கான விரைவு பஸ் கட்டணம் 17 ரூபாயில் இருந்து 24 ரூபாய் ஆகவும், அதிசொகுசு, இடைநில்லா பஸ்கள், புறவழிச்சாலை இயக்க பஸ்கள் ஆகியவற்றுக்கான குறைந்தபட்ச கட்டணம் 18 ரூபாயில் இருந்து 27 ரூபாய் ஆகவும் உயர்த்தப்பட்டு உள்ளது.


Mega Offer

| | |
|---|---|
| Intel Core 2 Duo<br>Intel Chipset M/B<br>4 GB DDR 2 Ram<br>250 GB Sata H.D.<br>DVD R/W<br>ATX Cabinet<br>Multimedia K/B<br>Optical Mouse<br>15.6" LED Monitor | Intel Core 2 Duo<br>Intel Chipset M/B<br>4 GB DDR 3 Ram<br>250 GB Sata H.D<br>DVD R/W<br>ATX Cabinet<br>Multimedia K/B<br>Optical Mouse<br>18" LED Monitor (3 year) |
| Rs. 10,000 | Rs.13,500 |

All Major Credit Card Accepted
1 Year warranty
Arul Systems
No.83, Karaneeswarar Pakoda St, Mylapore, Chennai-4.
Cell : 94440 41973 Ph:044-24660309

EXPRESS COURIER & CARGO to USA , UK, CANADA ......
We accept Home made / Branded Sweets, Savouries, Pickles, Thokus, Vadams, Appalams, Electronics, Medicines & More
FREE PACKING & GAURANTEED 2-3 WORKING DAYS DELIVERY


SPL RATES FOR BULK BOOKINGS
PLS CALL US 9840386615 / 9940100200 / 9940211044
044 - 43533425 / 48636456

KRISHNAMACHARYA HEALING AND YOGA FOUNDATION
FREE YOGA THERAPY CONSULTATION CAMP
Date : 04 February 2018 Time : 10.00 am to 4.30 pm
Consultation provided for ailments related to Bone and Joints, Thyroid, Respiration, Cardiac,Infertility, Uterus, Vision, Migraine, Sleep, Pre &Post Natal, Blood Pressure, Cholesterol, Concentration, Stress and Cancer among others
For Adults & Childres
For appointments : +91 96000 98836 / 94440 84464
No.60, Greenways Road Extention, R A Puram, Chennai - 600 028.
Lankmark : Greenwavs Railwav Station

KRISHNAMACHARYA HEALING AND YOGA FOUNDATION

## BOOK RELEASE FUNCTION OF "THE YOGA OF T KRISHNAMACHARYA AUTHORED BY SRI TKV DESIKACHAR



The book release function was held Krishnamacharya Healing & Yoga Foundation, 60, Greenways Road Extension, R A Puram, Chennai – 600028". on 20th January 2018. he book was released by Mr. V Vaikunth, IPS - Former Director General Police, Tamilnadu, and the first copy of the book was received by Prof.P Jeyachandran delightfully.

### ABOUT THE BOOK - THE YOGA OF T KRISHNAMACHARYA

T Krishnamacharya, of a family that can trace its origins back to Nathamuni, a South Indian Yogi of the seventh and eighth centuries, was born in the village of Muchukunte, Karnataka State, in 1888. His formal education included degrees from several universities. He then studied for seven years under a distinguished Yogi in Western Tibet, eventually returning to South India and establishing a school of Yoga in the palace of the Maharaja of Mysore. After Independence he moved to Madras, where he continued to live until his passing in 1989. He is widely regarded as the father of modern Yoga and Yoga Therapy, and is the main reference for most Yoga traditions that are in vogue today. One of the greatest contributions of AcaryaT.Krishnamacharya is that he integrated the fundamental principle of Prapatti, the part of complete surrender held in the highest regard in the Sri VaisnavaSampradaya, into the Ashtanga Yoga practice suggested by Maharishi Patanjali. In his life of over hundred years dedicatedly followed this path inspiring his students to practice yoga as a way of becoming fit for Saranagati. The "Yoga of T. Krishnamacharya" is a book that summarises all the essential teachings of Sri. T. Krishnamacharya in a simple manner that is appealing to the common man. Even in this book, Sri TKV Desikachar, son and student of Āchārya T. Krishnamacharya points out that devotion to Grace is the highest purpose of humanity.

# CLASSIFIEDS

**TYPING**

Tamil & English DTP & Book work will be undertaken @ reasonable cost

CONTACT

8072753760

**HOME FOOD**

Tasty Homely prepared Bengali Rasagulla and Chappati, Aloo Parota available in Mylapore, Chennai.
7am to 8 pm
Party Orders also undertaken

Contact 9962510699 9884727351

**HINDI TUITION**

HINDI TUITIONS UNDERTAKEN @ RAPURAM FOR SCHOOL STUDENTS UPTO CLASS V AND PRACHAR SABHA EXAMS

7550266431

**PRANAVAMM HOME NEEDS**

HOME MADE APPALAM, VADAM, VATHALS, PICKLES, PODI & SNACKS WHOLESALE & RETAIL DEALER

New No.24, Old No.89, Adam Street, Mylapore, Chennai-600 004.

9444102394

# மனதை கவர்ந்த கதை

பூட்டிய கிரில்லுக்கு அப்பால், ஒரு பெரியவர், கசங்கிய சாதாரண வேட்டி சட்டை, முகத்தில் கருப்பும், வெள்ளையுமாக மண்டிய ரோமக் காடு, நீண்ட பயணத்தால் களைத்த முகம் என, கையில் நகைக்கடை விளம்பரத்துடன் இருந்த ரெக்சின் பையுடன் நின்றிருந்தார். அவர் கையிலிருந்த சீட்டை பார்த்தார்.

''ஆனந்த், நம்பர். 8, யோகானந்தம் நகர்?'' ''ஆமாம்... இது தான். நான் தான் ஆனந்த்... நீங்க... என்ன வேணும்?'' அவர் வறண்ட உதடுகளை, நாவால் ஈரப்படுத்திக் கொண்டார். ''நான் உங்கப்பாவோட நண்பன்; காரைக்காலேருந்து வர்றேன். உங்கப்பா லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்கார்.''

பெரியவர் ரெக்சின் பை ஜிப்பை திறந்து, ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார். வாங்கிப் பார்த்த ஆனந்த், ''அப்பாவா?'' என்று வினவியபடி, கடிதத்தை படித்தான். அதில், 'அன்புள்ள ஆனந்துக்கு, அப்பா எழுதுவது. ஆசிர்வாதம். கடிதம் கொண்டு வரும் ராமசாமி, என் நண்பன். ரொம்ப கஷ்ட ஜீவனம். இவரது ஒரே பிள்ளை, சமீபத்தில் விபத்தில் இறந்து விட்டான்.



விபத்துக்கான இழப்பீடு கிடைத்தால், ராமசாமியும், அவர் மனைவியும் வாழ, ஓரளவாவது உதவியாக இருக்கும். ''விபத்து சம்பந்தமான போலீஸ் விசாரணை, விபத்து ஏற்படுத்திய டிராவல்ஸ் வேன் உரிமையாளர் தர ஒப்புக் கொண்ட இழப்பீடு போன்ற சகல விவரங்களையும் சேகரித்து, அவரிடம் கொடுத்தனுப்பி இருக்கிறேன். சென்னையில், தலைமை அலுவலகத்தில் தருவார்களாம்... சென்னை அவருக்கு புதிது. நீ கொஞ்சம் அவருக்கு உதவி செய்தால் நல்லது; செய்வாய் என்று நம்புகிறேன். மற்றபடி உடம்பை பார்த்துக் கொள். பொங்கலுக்கு கண்டிப்பாக ஊருக்கு வர வேண்டும். உன் அப்பா பரமேஸ்வரன்...' என்று எழுதப்பட்டிருந்தது.

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார் ராமசாமி. ஒரு வினாடி யோசித்தவன், சட்டென சாவி எடுத்து வந்து, கேட்டைத் திறந்தான். ''வாங்க சார்... உட்காருங்க...'' என்றவன், டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். தயங்கியபடி உள்ளே வந்த ராமசாமி, தண்ணீரை வாங்கிப் பருகினார். ''சாப்பிட்டீங்களா?''

''இல்லே... வழியிலே இரண்டு வாழைப் பழம் சாப்பிட்டேன். பஸ் லேட்டு, காலையில காரைக்கால்லே கிளம்பினா, சாயங்காலம் மெட்ராஸ் போயிடலாம்ன்னு உங்கப்பா சொன்னார். பஸ் பிரேக் டவுன் ஆயிடுச்சு... அதான்... அகாலத்திலே வந்து...'' ''அதனாலே என்ன... பரவாயில்லை.'' பிரிட்ஜை திறந்து பார்த்தான் ஆனந்த். தோசைமாவு இருந்தது. நான்கு தோசை சுட்டு, மிளகாய் பொடி, எண்ணெய், தண்ணீர் கொண்டு வந்து, டேபிள் மேல் வைத்தான். ''சாப்பிடுங்க... இதோ வர்றேன்,'' என்றவன், வாசல் பக்கம் மொபைலுடன் போனான்.

திரும்பி வந்த போது, சாப்பிட்டு முடித்து, கை நிறைய பேப்பர்களுடன் காத்திருந்தார் ராமசாமி. ''சொல்லுங்க... என்ன நடந்தது?'' என்று, அவர் எதிரில் அமர்ந்து, பேப்பர்களை வாங்கிப் பார்த்தான்.

பையனின் போட்டோ இருந்தது. 22 வயதில், அழகாக, பதவிசாக இருந்தான் பையன். ஆனந்துக்கு கண்கள் கலங்கின. முகத்தை துடைத்துக் கொண்டார் ராமசாமி.

''இவனுக்கு முன்னாலே பிறந்த நாலஞ்சு பேரும், சின்ன வயசிலேயே போய் சேர்ந்துட்டாங்க... இவன் தான் தங்கினான். மகேஷ்ன்னு பேர்; கஷ்டப்பட்டு படிக்க வெச்சேன்... பொறுப்பான பிள்ளை. ஸ்காலர்ஷிப்லயே பி.இ., முடிச்சான். வேலை கிடைச்சுட்டா, நம்ம கஷ்டம் தீர்ந்துடும்ன்னு வாய்க்குவாய் சொல்வான்; வேலையும் கிடைச்சுது. என்னையும், என் மனைவியையும், நிற்க வச்சு நமஸ்காரம் செய்துட்டு, மெட்ராஸ் கிளம்பினான். பஸ் ஸ்டாண்ட் போக, ரோடு கிராஸ் செய்யறப்போ, வேகமா வந்த டிராவல் வேன் மோதி, ஸ்பாட்லேயே...'' மேல் துண்டால் முகத்தை மூடி, குலுங்கினார் ராமசாமி; பேசாமல் அவரையே பார்த்தான் ஆனந்த்.
அவராகவே தொடர்ந்தார். ''அந்த வேன் சொந்தக்காரர், நஷ்ட ஈடு தர ஒத்துக்கிட்டார். முதல்லே அதை வாங்கவே மனசு ஒத்துக்கல. பிள்ளையை பறி கொடுத்துட்டு, அந்த பணத்திலே சாப்பிடறதான்னு வெறுப்பா இருந்தது. உங்கப்பா தான் எனக்கு ஆறுதல் சொல்லி, வாங்கிக்க சொல்லி வற்புறுத்தினார். எனக்கு நிரந்தரமா ஒரு வேலையும் கிடையாது. என் மனைவி ஏற்கனவே நோயாளி, பிள்ளை போன துக்கத்திலே, படுத்த படுக்கையாயிட்டா... எங்களை பகவான் அழைச்சுக்கற வரை, சாப்பிட்டுத் தொலைக்கணுமே... அதனாலே, கடைசியா நஷ்ட ஈடு வாங்கிக்க சம்மதிச்சேன். உங்கப்பா தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து, இங்கே அனுப்பி வெச்சார். என் பிள்ளை உங்களுக்கு உதவி செய்வான்னு
லெட்டர் கொடுத்தார்.''

''செய்யறேன்... கண்டிப்பா உதவி செய்றேன்,'' என்று எழுந்தவன், அவர் படுக்க, பாயும் தலையணையும் கொடுத்தான். மறுநாள் காலை, காபி போட்டு அவருக்கு கொடுத்து, தானும் குடித்து, குளித்து விட்டு வந்தான். அவரும் குளித்து விட்டு வர, இருவருமாக பைக்கில் கிளம்பினர். ''இங்கே நுங்கம்பாக்கம்ன்னு இருக்காமே... அங்கே தான் ஹெட் ஆபீஸ் இருக்காம்.'' ''நுங்கம்பாக்கம் பக்கம் தான். நான் கூட வந்து செஞ்சு தர்றேன்,

வழியில் ஓட்டலில் டிபனை முடித்து, டிராவல் ஆபீஸ் வந்தனர். பார்மாலிடீஸ் எல்லாம் முடித்து, 'செக்' கைக்கு வர மதியானம் ஆகி விட்டது. ''ரொம்ப நன்றிப்பா... எனக்காக ரொம்ப சிரமப்பட்டுட்டே. நான் இப்படியே ஊருக்கு கிளம்பறேன். இப்ப பஸ் புடிச்சா, ராத்திரிக்குள்ளே காரைக்கால் போயிடலாம். என் மனைவி தனியா இருக்கா; துணைக்கு ஆள் இல்லை...'' ''நானே பஸ் ஏத்தி விடறேன் வாங்க,'' என்றவன், ஓட்டலுக்கு அழைத்துப் போய், அவர் மறுத்தும் கேளாமல், சாப்பிட வைத்து, தானும் சாப்பிட்டான்.
கோயம்பேடு வரை, பைக்கில் அழைத்துச் சென்று, காரைக்கால் பஸ்சில் ஏற்றி விட்டான். டிக்கட் வாங்க என்று ஐநூறு ரூபாயை, பிடிவாதமாக அவர் சட்டைப் பையில் திணித்தான். ''ஒரு நிமிஷம்...'' என்று போனவன், ஒரு பிளாஸ்டிக் பையுடன் வந்தான்.

''ஊர் போய் சேர எத்தனை நேரம் ஆகுமோ, வழியிலே சாப்பிட்டுக்குங்க...'' என்று, டிபன் பொட்டலம், தண்ணீர் பாட்டில் அடங்கிய பையை, அவரிடம் கொடுத்தான். அவர் நெகிழ்ந்தார். ''என்னாலே உனக்கு ரொம்ப சிரமம்ப்பா. லீவு வேறே போட்டுட்டு, எனக்காக அலைஞ்சிருக்கே... ஊருக்கு போனதும் முதல் வேலையா உங்கப்பாவைப் பார்த்து நன்றி சொல்லணும்.''

ராமசாமி உணர்ச்சி வசப்பட்டு பேசிக் கொண்டே போக, அமைதியாக அவர் பக்கத்தில் அமர்ந்தான், ஆனந்த். ''ஒரு விஷயம் சார்... நீங்க தேடி வந்த ஆனந்த் நான் இல்லே...''
ராமசாமி திடுக்கிட்டார். ''என்னப்பா சொல்றே?'' ''ஆமாம்... நீங்க அட்ரஸ் தப்பா வந்துட்டீங்க... நான் இருக்கிறது, யோகானந்தம் நகர் எக்ஸ்டன்ஷன். நீங்க, மெயின் யோகானந்தம் நகர் போயிருக்கணும். அது, கிட்டத்தட்ட, 2 கி.மீ., தொலைவில இருக்கு.''

ராமசாமிக்கு, 'குப்'பென வியர்த்தது. ''அடடா... தப்பு செய்துட்டேனே... ரொம்ப ரொம்ப சாரிப்பா. நீ, நான் வந்தவுடனேயே சொல்லியிருக்கலாமே... அனாவசியமா எதுக்கு எனக்காக மெனக்கட்டு...'' அவரைத் தடுத்தான் ஆனந்த். ''நீங்க வந்தது ராத்திரி பத்தரை மணிக்கு... மெட்ராஸ்ல இருக்கிறவங்களுக்கே, இங்க அட்ரஸ் தேடி கண்டு பிடிக்கறது கஷ்டம்; நீங்க மெட்ராசுக்கு புதுசு வேற. அதிலேயும், நீங்க வந்த காரியத்தை பத்தி தெரிஞ்சதுலே, எனக்கு மனசு சங்கடமா போயிட்டது... ''அதான் உங்களை சாப்பிட சொல்லிட்டு, லெட்டர்லே இருந்த நம்பருக்கு கால் போட்டு பேசினேன். நீங்க அட்ரஸ் மாறி வந்த விஷயம் கேட்டு, உங்க நண்பர், அதான் அந்த ஆனந்தோட அப்பா ,ரொம்பவே வருத்தப்பட்டார். அவர் கிட்டே, அவர் பிள்ளையோட நம்பர் கேட்டு வாங்கிப் பேசிட்டு... பொழுது விடிஞ்சதும், ஒரு ஆட்டோவிலே உங்களை அனுப்பி வைக்கலாம்ன்னு இருந்தேன்.


''ஆனா, மொபைல் போன்ல பேசினது ஆனந்தோட மனைவி. அவர் ஆபீஸ் விஷயமா டில்லி போயிருக்காராம். வர ஒரு வாரம் ஆகுமாம். அப்பதான் முடிவு செய்தேன். நேரடியா, நானே உங்களுக்கு உதவி செய்திடலாம்ன்னு... எந்த ஆனந்துன்னா என்ன சார்... நஷ்ட ஈடு உங்களுக்கு கிடைக்க, நான் உதவியா இருந்தேனேன்னு, நிம்மதி என் மனசிலே நிறைஞ்சு இருக்கு. அது போதும் சார்...'' டிரைவரும், கண்டக்டரும் பஸ்சில் ஏற, எழுந்தான் ஆனந்த். அவன் கைகளைப் பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்டார் ராமசாமி. அவன் உள்ளங்கை, ராமசாமியின் கண்ணீரால் நனைந்தது. ''நல்லா இருப்பா... நல்லா இரு... வேறென்ன சொல்றது?''
பதினைந்து வருடங்களுக்கு முன் செத்துப் போன தன் அப்பாவை நினைத்துக் கொண்டான். 'அப்பா... நீங்க இப்ப உயிரோடு இருந்து, இது மாதிரி லெட்டர் கொடுத்தனுப்பி இருந்தாலும், கண்டிப்பா உதவி செஞ்சிருப்பேன். என் வளர்ச்சியை பார்க்காமலே போயிட்டீங்களே... யாரோ ஒருத்தருக்கு பிள்ளையா இருந்து, அவர் நண்பருக்கு உதவி செய்திருக்கேன் அப்பா... உங்களுக்கு திருப்தி தானே?' கனத்த மனதுடன், பஸ்சை விட்டு இறங்கினான் ஆனந்த்.

## Events of this week........

### SRI RAMAKRISHNA MATH  TIME : 5.30PM

| | |
|---|---|
| 27/01/2018 | Tiruvasagam Swami Apavargananda |
| 28/01/2018 | Philosophical Significance of Sri Ramakrishna Aratrikam Swami Paramasukhananda |
| 29/01/2018 | Devi Mahatmyam Swami Suprajnananda |
| 30/01/2018 | Abhirami Andhadhi Swami Nilamadhavananda |
| 31/01/2018 | The Life and Teachings of Swami Adbhutanandaji Swami Paramasukhananda (7.00pm) |

**Venue : Sri Ramakrishna Math, Mylapore**




உ

அருள்மிகு கற்பகாம்பாள்
உடனுறை
அருள்மிகு கபாலீசுவரர்
திருக்கோயில்
மயிலாப்பூர், சென்னை - 4

**"திருவாசகம்" - காட்சியுரை**
PowerPoint Presentation உடன் கூடிய சொற்பொழிவு
ஆன்மிகத்தில் ஒரு புதுமை
இந்த வாரம் திருவாசகத்தின் 24-வது துளி தேன்
**"அடைக்கலப் பத்து"**

பலன்: துன்பம் நெருங்காது &
ஈசனே நமக்கு அடைக்கலம் / பாதுகாப்பு தருவான்

நாள்: 28 ஜனவரி 2018, ஞாயிறு
நேரம்: மாலை 7.00 - 8.00
அனைவரும் வருக!!! அருள் பெறுக!!!
புத்தாண்டு நல்வாழ்த்துகள் !!!

முனைவர் ஆரூர். எஸ். சுந்தரராமன்

e-mail: aaroor14@gmail.com
www.aaroorsundararaman.com
YouTube: aaroor s sundararaman thiruvasagam



அருள்மிகு மயிலை கற்பகாம்பாள் உடனாய கபாலீசுவரர் திருக்கோயில்

### தைப் பூசத் தெப்பத் திருவிழா

ஜனவரி, பிப்ரவரி 2018

| | | |
|---|---|---|
| 30.01.2018 | புதன் | அருள்மிகு கபாலீஸ்வரர் தெப்பம் |
| 01.02.2018 | வியாழன் | அருள்மிகு சிங்காரவேலர் தெப்பம் |
| 02.02.2018 | வெள்ளி | அருள்மிகு சிங்காரவேலர் தெப்பம் |

### NAADA INBAM

| | |
|---|---|
| 27.01.18 6.00pm | Ramnad Krishnan Centenary Celebrations concert - Thiruvarur Girish & Party |
| 30.01.18 6.15pm | NAADA INBAM - Soundarya Chandrasekar & Party |
| 31.01.18 6.15pm | NAADA INBAM - 'guruguhaaya Bhaktangrahaya" - A special concert on Thai Poosam by Durgga Venkatesh & Party |

**Venue : Ragasudha Hall Luz Avenue, Mylapore**

## Express ஜோக்ஸ்.....



சன்யாசிக்கும் சம்சாரிக்கும் என்ன வித்தியாசம்?
புலித்தோலில் தூங்குபவர் சன்யாசி.
புலியுடனேயே தூங்குபவர் சம்சாரி.

கல்யாணம் பண்ணின ஒரு ஆம்பள
நிம்மதியா இருக்கான்னா
ஒன்னு அவனுக்கு கெடச்ச மனைவி
'வரமா' இருக்கனும்
இல்ல ஊருக்கு போன மனைவி 'வராம' இருக்கனும்

மகன்: சகலை என்றால் என்னப்பா?
அப்பா: ஒரே கம்பெனி பொருள வாங்கி ஏமாந்தவங்க..

டாக்டர்: முன் பல் ரெண்டும் எப்படி விழுந்துச்சு...?
நோயாளி: சொல்ல மாட்டேன் டாக்டர்.
டாக்டர்: ஏன் ?
நோயாளி: நடந்ததை வெளில சொன்னா மீதி பல்லும் கொட்டிடும்னு என் மனைவி சொல்லி இருக்கா டாக்டர்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.
**TNSC BANK**
(RBI Licensed Scheduled Bank)
TNSC BANK
Mandaveli Branch  Ph. 24938667

# 44th BRANCH DAY CELEBRATIONS

**29th January 2018**

**GENERAL HEALTH CAMP**
**At The Branch on 29-01-2018**
**From 9.00 am to 1.30 pm**
*All are welcome*

kauvery Hospital



On the past Saturday, 20th January 2018 the Krishnamacharya Healing and Yoga Foundation (www.khyf.net) in Chennai successfully launched the book "The Yoga of T. Krishnamacharya" by TKV Desikachar. The book was first published in 1982 and was now finally re-released after it had been out of print for some years. The book is based on a series of talks on T Krishnamacharya delivered by TKV Desikachar in Europe and presents the great Yoga master in his different roles as teacher, physician and Yogi and explores some of the main concepts of his teachings. The Krishnamacharya Healing and Yoga Foundation feels extremely privileged that Mr. V Vaikunth, IPS, former DG of the police, inaugurated the book with a beautiful speech on Yoga followed by the guest of honor, Professor P. Jayachandran, sharing his own experiences with TKV Desikachar and T. Krishnamacharya with the public. We were also able to hand one of the first copies to Dr. Elangovan, MSc (Yoga).,M.P.Ed.,M.Ed., MPhil., Ph.D. Professor & Head of the department of Yoga at the physical education and sports university, Chennai, who stressed how instrumental T. Krishnamacharya's work was for modern day Yoga. The book will now also be available to the students at university. The new book will be available online at www.khyf.net/shop in the coming days but you can also directly order your copy at the Krishnamacharya Healing and Yoga Foundation, 60 Greenways Road Extension, 600028 Chennai. Phone: 044-42066856, email: office@khyf.net

### PICKUP FREE MYLAI EXPRESS AT THE FOLLOWING PLACES ON EVERY SUNDAY IN MYLAPORE

Surya Sweets
Krishna Medical
Adyar Ananda bhavan
Karpagambal mess
Geetha Coffee Works
Hari Agencies, Luz
Mani Store, Kutchery Road,
Nilgris,
C.P.Ramasamy Road,
Surya Greens, RA Puram,
Karuppaiah Pharmacy, Luz
Pazhamudir Cholai, Luz
Pazhamudir Cholai, RA Puram,
Suswaad Sweets, RA Puram
Leo Coffee
Sri Sai Utsav Sweets,
Venkatesa Agraharam Road,
Venkateswara Boli Stall)

Publisher : K.Ganesh
Editor : N.Panchapakesan
Designer : Ushashankar

Our Office Address:
No.20/45, Alamelumangapuram,
Mylapore, Chennai - 600 004.
PH: 044-49574279

Email: mylaiexpress1@gmail.com
Website : www.mylaiexpress.com

DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Mylai Express does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Mylai Express shall not be held responsible / liable for any consequence, in case such claim.

FOR ADVERTISEMENT IN MYLAI EXPRESS CONTACT
9840643902
9884944452

# ASTHIKA PRAVACHANA RATHNA AWARDED TO SRI RAMA DIKSHIDHAR BY ASTHIKA SAMAJAM









On January 18th Asthika Samajam Venus colony awarded its prestigious award of 2018 namely ASTHIKA PRAVACHANA RATHNA award to Vadakudi Brahmasri RAMA DIKSHITHAR at its premises gloriously with the Blessings of Jagadguru Jeyandra Saraswathi and Sankara Vijayendra swamigal in a Video Conference way at Asthika Samajam campus Venus colony. The function started with lighting of Kuthuvillaku by elderly women followed by a vedic group prayer spiritually. Mr. G.Sitaraman President of the Samajam welcomed the guests on the stage and at the hall nicely. He also honoured the Chief guest of the function Mr. Sekar of Lancor Holdings and the awardee delightfully. The Chief Guest of the function then conferred the title "Asthika Pravachana Rathna" on Brahmasri ' Rama Dikshithar ' with Blessings of Kanchi Swamigal through Video Conference from kancheepuram. The award carries a shawl, citation and cash award. Dr.B.Sundarkumar felicitated the awardees credentials wonderfully. Jagadguru Sankara Vijeyendra swamigal also felicitated about the awardee and gave a 'Anugraha Bhashanam' through video conference to the devotees gathered in large number at the hall on that day. All the office bearers of the samajam took active part at the function and made the function Grand. The awardee also spoke and thanked the samajam for choosing him for the award this year. The function concluded with a vote of thanks aptly. Before & after the award function Veda Parayanam by Vedic Pandits and Upanyasam by Dr.B.Sundarkumar were staged for rasikas pleasure on that day.









## WINNERS



IKKAI Isshinryu karate association of india recently conducted the karate kobudo national championships at pune recently. Teams from several indian states participated in the tournament. Boufuuukai Isshniryu school from Chennai participated in the tournament. Our team won the individual events. We won 8 gold, 6 silver and 3 bronze medals. Master Srihari and Vaishnavi won the grand championship. She is 5 years old and is the youngest participant in the tournament.





## தெப்பம்

மயிலை ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் ஆலயத்தில் சென்ற வாரம் தெப்பத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. ஜனவரி 20 அன்று நடைபெற்ற தெப்பத் திருவிழா ஒரு காட்சி.

# திருவள்ளுவர் இசை விழா






உலகப் பொதுமறையாம் திருக்குறள் தந்த வள்ளல் ஐயன் திருவள்ளுவர் இசைவிழா மற்றும் தமிழ்தாயின் வடிவமாக வணங்கப்படும் அன்னை ஆண்டாள் நாச்சியாரை போற்றும் வண்ணம் **மங்கள இசை கலைஞர்கள் நலச்சங்கம்** சார்பில் 133 நாதஸ்வர மற்றும் 133 தவில் விற்பன்னர்கள் பங்கேற்று சிறப்பித்த "நாதசங்கமம்" உலகப்பொதுமறையாம் திருக்குறளின் 133 அதிகாரங்களைக் குறிப்பிடும் வகையில், தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பெருவிழாவின் ஒரு அங்கமாக திருவள்ளுவர் தினத்தன்று 15.01.2018 திங்கட்கிழமை மாலை 4 மணி அளவில் மயிலாப்பூர் பேயாழ்வார் அவதாரத்தலமான ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் வளாகத்தில் நடைபெற்றது. விழாவை சிகப்பு நாடா மாத இதழ், எக்ஸ்பிரஸ் வேளச்சேரி வார இதழ் ஆசிரியர் திரு.ஆர்.ராஜேஷ் அவர்கள் தலைமையில், மகாகவி பாரதியார் மக்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர் வழக்கறிஞர் மயிலை எஸ்.சத்யா அவர்கள் விழாவை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார் மற்றும் சங்க நிர்வாகிகள் முன்னிலையில் தமிழகம் மற்றுமின்றி பிறத் தென் மாநிலங்களிலிருந்தும் திரளாக நூற்றுக்கணக்கான இசை விற்பன்னர்களைக் கொண்டு ஐயன் திருவள்ளுவர்க்கு இசை ஆராதனை சிறப்பாக நடைபெற்றது.











**SNAPSHOTS OF URUR OLCOTT KUPPAM VIZHA** celebrations PAVA KATHAKALI, POIKAL KUTHIRAI & KARAKATTAM shows @ Ragasudha Hall, Luz Mylapore on 21 st January.





ICCR in collaboration with SAMF under their Monthly Horizon Programme Vocal concert by Gnana Saraswathi M.S.Sahana Samraj & Party on Shri Ariyakudi Day 23rd January 2018 @ Ragasudha Hall, Mylapore.

# தைப்பூசமும் அதன் சிறப்புகளும்

தமிழ் கடவுளான முருகப்பெருமானின் திருவிழாக்களில் முக்கியமானது தைப்பூசம் ஆகும். 27 நட்சத்திர மண்டலங்களில் எட்டாவது நட்சத்திரமாக பூசம் அமைகின்றது. தை மாதத்திலே வரும் பூச நட்சத்திரம் புண்ணிய நாள் தைப்பூச விழாவாக இந்துக்களால் கொண்டாடப்படுகின்றது. தைப்பூசம் வரும் நாள் பெரும்பாலும் நிறைமதி நாளாக (பூரணை நாளாக) இருக்கும். தைப்பூசம் முருகப்பெருமானுடைய விஷேட தினமாகும். அன்றைய தினம் குழந்தைகளுக்கு தோடு குத்துதல்,



பாதயாத்திரையாக வரும் பக்தர்கள், மார்கழி மாத ஆரம்பத்தில் துளசி மாலை அணிந்து விரதத்தை தொடங்குவார்கள். சஷ்டிகவசம், சண்முக கவசம், திருப்புகழ் போன்ற பாடல்களை அன்றாடம் பாராயணம் செய்து தைப்பூசத்தன்று பழனி முருகன் கோயிலில் சிறப்பு வழிபாடு செய்து விரதத்தை முடிப்பார்கள்.

ஆறுமுகப் பெருமானின் அருளை அடைவதற்கு தைப்பூசம் உகந்த நாள். முருகப்பெருமானின் ஆறுபடை வீடுளிலும் முருகனடியார்கள் பலர் பாதயாத்திரையாகச் சென்று தைப்பூசத்தன்று முருகனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்யும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

தைப்பூசத்தன்று முருகனுக்கு காவடி நேர்த்திக்கடன் செலுத்துவதையும் பக்தர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். தீராத நோய்கள் ஏற்பட்டு அவதிப்படும் பட்சத்தில், முருகக் கடவுளுக்கு காவடி எடுப்பதாக வேண்டிக் கொண்டால் அவர்களைப் பீடித்துள்ள நோய் அகன்று உடல் ஆரோக்கியம் பெறுவதை எண்ணற்ற பக்தர்கள் உணர்வுப் பூர்வமாக அனுபவித்துள்ளனர். தங்களின் வேண்டுதல் நிறைவேறியதும், பழனி முருகன் கோயிலில் பக்தர்கள் தைப்பூச தினத்தன்று காவடி நேர்ச்சையை செலுத்துகிறார்கள். முருகன் உறையும் எல்லா தலங்களிலுமே காவடி எடுக்கும் பக்தர்கள் உள்ளனர்.

தை பிறந்தால் வழிபிறக்கும் என்று வாழ்க்கையை நம்பிக்கையுடன் சூரிய பகவானுக்குப் பொங்கலிட்டு வழிபட்டு எதிர்நோக்கும் நாம் தைப்பூச நன்னாளிலே நம்மை வாட்டிவதைக்கும் துன்ப, துயரங்கள் யாவும் துடைத்தெறியப்பட வேண்டும் என்று நம்மை ஆட்டிவிக்கும் மாபெரும் சக்தியான சிவசக்தியை மனதார பிரார்த்தனை செய்வதுடன் வாழ்விலே நலங்கள் சூழ, வாழ்வு சிறக்க வாழவழி கிட்ட வேண்டும் என்று விரதமிருந்து வேண்டுதல் செய்து தொழுகின்றோம். இத்தினத்தில் புண்ணிய நதிகளில் நீராடுவது சிறப்பாகும் இயலாதவர்கள் புண்ணிய நதிகளை நினைத்துப் போற்றி வழிபட்டு நீராடுதல் வேண்டும். வாழ்வில் ஒளியேற்றும் இத் தைப்பூச நன்னாள் பல்வேறு நற்செயல்கள் தொடங்கும் நாளாக அமைகின்றது. 'தைப்பூச திருநாளில் தொட்டதெல்லாம் துலங்கும்' என்பது பழமொழியாக அமைவதால்; ஏடு தொடக்கம், புதிர் எடுத்தல், புதி துண்ணல், பெண் குழந்தைக்கு காது, மூக்கு குத்துதல், திருமணப் பேச்சுக்கள் ஆரம்பித்தல், ஒப்பந்தங்கள் செய்தல் போன்ற நற்செயல்கள் மேற் கொள்ளப்பெறுகின்றன. இத் தைபூசத்திருநாளிலே தொடங்கும் செயல்கள் தொய்வின்றி இனிதே நிறைவேறும் என்பது காலம் காலமாக நாம் கொண்டுள்ள நம்பிக்கையாகும். நம்பிக்கையே வாழ்வை வழி நடத்தும் சக்தி. எமக்கும் மேலான சக்தியொன்று உண்டு. அந்தச் சக்தியின் மீது அதாவது உலகைப் படைத்து, காத்து, அருளி, அழித்து, மறைக்கும் அந்த மாபெரும் சக்தி மீது பக்திகொண்டு நம்பிக்கையுடன் வழிபட்டால் தன்னம்பிக்கை தானே நமக்கு வந்துவிடும். இறை சக்தியாகிய அதற்கு மேலான சக்தியொன்றில்லாத மாபெரும் சக்தி நமக்குத் துணைசெய்யும். எம்மை வழிநடத்தும் என்ற நம்பிக்கை நம்மனதில் மேலோங்கிவிட்டால் தன்னம்பிக்கை தானே வந்து நம் வாழ்வை நம்பிக்கையுடன் எதிர் கொள்ளச் செய்யும். உலக சிருஷ்டியின் சிருஷ்டிகர்த்தாவின் மாபெரும் சக்தியின் உண்மையை உள்ளத்தில் இருத்தி அச்சம் இல்லாத நிம்மதியான பெருவாழ்வை எதிர் கொள்ள இத்தைப்பூச நன்னாளிலே சிவசக்தி பேரருளை நாடி வழிபடுவோம்.

All kinds of POOJAS, HOMAMS performed in most religious way at your home.
SHRARTHAM CEREMONY also performed at our / your place.
Contact :
S.GANAPATHI RAMA SASTRIGAL
Mob: 94444 69174
Address: No.12, T.P.Scheme Road, Raja Street Extension, Mandaveli, Chennai - 600 028. (Near BSNL)

# தை அமாவாசையும் அபிராமிப் பட்டரும்

தை அமாவாசைக்கும் அபிராமிப் பட்டருக்கும் உள்ள தொடர்பை பற்றி கீழே விரிவாக பார்க்கலாம். திருக்கடையூர் ஆலயத்தில் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வழிபாடுகள் நடத்திவந்த அத்யான பட்டர் என்னும் தலைமை பட்டரான அமிர்தலிங்க அய்யருக்கு சுப்பிரமணியன் என்ற மகன் பிறந்தார். பின்னாளில் அவர்தான் அபிராமி பட்டராக மாறினார். அமிர்தலிங்க அய்யர் தம் மகன் அபிராமி பட்டருக்கு சங்கீதப் பயிற்சியும், குடும்பத்தின் பரம்பரையான தேவி உபாசனையும் அறியச் செய்தார். அபிராமிபட்டர் சிறுவயது முதலே அன்னை அபிராமியிடம், அன்பும் பக்தியும் கொண்டிருந்தார். அன்னையைத் தியானித்து யோகசித்தி அடைந்தார். அவர் தமிழ் தவிர வடமொழியிலும், சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் உள்ளத்தில் அபிராமி அன்னையின் மீது தோன்றும் அன்பின் விளைவாக பல துதிகளைத் தாமே இயற்றிப் பாடியும் வந்தார்.

அம்பிகையை வழிபடும் சாக்த நெறியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டார். ஒளி வடிவில் அம்பிகையைத் தரிசித்து பேரின்பம் கண்டார். ஆனால், இவரின் தெய்வீக நிலையை மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. பித்தன், கிறுக்கன் என்று அவரை கேலியும் கிண்டலும் செய்தனர்.

யோக முறையில் அம்பிகையைத் துதித்து வந்த அபிராமிபட்டர் சரியை, கிரியை என்பவற்றைக் கடந்து யோகநிலையின் ஆதார பீடங்களில் அம்பாள் திருக்கோலத்தைக் கண்ணாரக் கண்டு இன்புற்று இடைப்பட்ட கிரந்திகளை எல்லாம் தாண்டிச்சென்று ஸஹஸ்ராரத்தில் ஒளிரும் ஒளிமயமான லலிதையின் திருவருளைப் பரிபூரணமாய் உணர்ந்து அந்த ஆனந்தத்தில் திளைத்து இன்புற்று இருந்தார். கோயிலுக்கு வரும் அனைத்து பெண்களையுமே அபிராமியின் அம்சமாகவே அவர் எண்ணி வழிபடுவார். அர்ச்சனைக்காக கைகளில் கொண்டுவரும் மலர்களை அந்தப் பெண்கள் மேல் தூவி மகிழ்வார். அவரது ஞானக் கண்களுக்கு அந்தப் பெண்கள் அபிராமி அம்சமாகவே தோன்றினார்கள். ஆனால் மக்களோ அபிராமி பட்டரை தினம் தினம் கேலியும், கிண்டலும் செய்து வந்தனர்.

ஒரு கட்டத்தில் அவருடைய ஆனந்த நிலையும், அதன் காரணமும் புரியாமல் போகவே இவர் ஏதோ துர்தேவதையை ஆராதித்து வந்த காரணத்தால் இப்படிப் பைத்தியமாய் ஆகி, ஆசாரங்களை எல்லாம் கைவிட்டுக் கெட்டுப் போய்விட்டார் என்று கூட சொல்லித் தூற்ற ஆரம்பித்தனர். அபிராமி பட்டரோ அதைக் காதில் வாங்கவில்லை. யாரையும் கண்டு கொள்ளவும் இல்லை. அபிராமியைத் துதிப்பதும், அவளைப் பற்றி துதிகள் இயற்றிப் பாடுவதுமாய் இருந்தார். தினமும் கோயிலில் அன்றைய திதிகளைக் கூறுவார். பிறகு அந்த திதிக்கு ஏற்றவாறு வழிபாட்டு நியமங்களை ஏற்பாடு செய்வதும் அபராமி பட்டரின் நித்ய கடமைகளில் ஒன்றாகும். இந்தப் பித்தனின் புகழை ஊரறிய, உலகறியச் செய்ய திருவுள்ளம் கொண்டாள் அன்னை அபிராமி! அதற்கான நாளும் நெருங்கியது. ஒரு நாள் தை அமாவாசை தினத்தன்று தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி (1675-1728) புரிந்து வந்த மராட்டிய மன்னர் சரபோஜி பூம்புகார் சென்று கடலில் நீராடினார். பிறகு அவர் திருக்கடவூருக்கு அமிர்தகடேசுவரரையும் அபிராமியையும் தரிசனம் செய்ய வந்தார். மன்னனைக் கண்டதும் மக்கள் வரவேற்று உபசரித்து வணங்கினார்கள். ஆனால் அபிராமிபட்டர் மன்னர் வந்திருப்பது அறியாமல், மன்னரை வணங்காமல் தனக்குள் தானே பேசிக் கொள்ளுவதும், சிரித்துக் கொள்ளுவதும், அழுவதுமாய் இருந்தார். மன்னர், இவர் யார் எனக் கேட்டார், சுற்றி இருந்தவர்கள் மன்னரிடம், மன்னா இவர் பெயர் அபிராமிபட்டர். தினமும் பைத்தியம் பிடித்தவர் போல நடந்து கொள்கிறார். தங்களுக்கு தர வேண்டிய மரியாதையை கூட வழங்காமல் கண்மூடி இருக்கிறார் பாருங்கள். எந்நேரமும் இப்படித்தான் இருப்பார். இவர் ஒரு பித்தன், என்று புகார் கூறினார்கள். ஆனால், சரபோஜி மன்னர் அவர்கள் சொன்னதை நம்பவில்லை. இது எவ்வளவு தூரம் உண்மையாக இருக்கக் கூடும் என நினைத்த வண்ணம் சரபோஜி மன்னர் அதைச் சோதிக்க எண்ணினார். புறநினைவு சற்றுமின்றி, தன்னுள்ளே அன்னையைக் கண்டு பரவச நிலையில் அமர்ந்திருந்த அபிராமி பட்டரிடம் நெருங்கி சென்று இன்று என்ன திதி? என்று கேட்டார்.

மன்னரின் வருகையைப்பற்றி உணராமல் அன்னை அபிராமியின் ஒளிமிகுந்த முகத்தை பற்றி மட்டுமே எண்ணி யோக நிலையிலேயே கோடி சூர்யப் பிரகாசமாய் அன்னையைத் தன் மனக்கண்ணில் கண்டுகளித்திருந்த அபிராமிபட்டர் சற்றும் தாமதிக்காமல், இன்று பவுர்ணமி திதி'' என்றார். உண்மையில் அன்று அமாவாசை. அதை நினைத்தபடி சரயோஜி மன்னர் அப்படியென்றால் இன்று இரவு பவுர்ணமி நிலவு வருமா? என கேட்டார். அதற்கு அபிராமிபட்டர் நிச்சயம் வரும் என கண்மூடிய நிலையில் கூறினார். சரபோஜி மன்னருக்கு கோபம்பொத்துக்கொண்டு வந்தது. இன்று இரவு பவுர்ணமி நிலவு வராவிட்டால் உனக்கு மரண தண்டனை என்றார். இது அரசகட்டளை என்று கூறி விட்டு மன்னர் சென்றார், அரசரும் அவருடைய பரிவாரமும் சென்ற பின்னர், தியானம் கலைந்தெழுந்த அபிராமி பட்டர் நிகழ்ந்ததை எல்லாம் மற்றவர்கள் மூலம் கேட்டு உணர்ந்தார். பெரிதும் வருந்தினார். ஏற்கெனவே ஊரும், உலகமும் தம்மைப் பித்தன் என்று சொல்லி எள்ளி நகையாடுவதை மெய்ப்பிப்பது போலவே நடந்த இந்த நிகழ்ச்சியால் கவலைப்பட்டார். இந்த தவறிலிருந்து அம்பிகையே தன்னைக் காத்தருளவேண்டும் என்று கண்ணீர் மல்க வேண்டினார். பிறகு அபிராமி சந்நிதி முன் ஒரு ஆழமான ஒரு குழியை வெட்டினார். அதில் விறகை அடுக்கி தீமூட்டினார். அதற்கு மேல் ஒரு விட்டமும், நூறு கயிறுகளாலான உறியையும் கட்டி, அதில் ஏறி அமர்ந்து கொண்டார். அம்பிகை எனக்குக் காட்சி கொடுத்து இந்தப் பழியை நீக்காவிட்டால் என் உயிரை விடுவேன்'' என்று சபதம் செய்தார். பின்னர் அன்னையை நினைத்தப்படி அபிராமி அந்தாதியைப் பாட ஆரம்பித்தார். ''உதிக்கின்ற செங்கதிர்'' என்று ஆரம்பிக்கும் அந்தாதிப் பாடல்களை பாடத்தொடங்கினார். அபிராமி அந்தாதி மொத்தம் நூறு பாடல்கள் கொண்டது. ஒவ்வொரு பாடல் முடிந்ததும் ஒவ்வொரு கயிறாக அறுத்துக்கொண்டே வந்தார். காலை போனது; நண்பகல் சென்றது; மாலையும் வந்தது... பொழுது சாய்ந்தது; பட்டரின் நம்பிக்கை சாயவில்லை! அமாவாசை என்பதால் வானம் இருண்டு உலகமே இருளில் மூழ்கி கிடந்தது ஆனால், அன்னையின் ஆசியால் நிலவு நிச்சயம் வரும் என்று அபிராமி பட்டர் நம்பினார். 78 பாடல்கள் பாடி முடிந்தது. 78 கயிறும் அறுபட்டு விட்டது. மிகுதியாக இருந்த கயிற்றில் உறியில் இருந்த வண்ணம் பட்டர் நம்பிக்கை இழக்காது பாடிக்கொண்டே இருந்தார்.

அபிராமிபட்டர் 79 வது பாடலாக அம்மா! உன் விழிக்கே அருள் பார்வையுண்டு. பழிபாவம் கொண்டு உழலும் மாந்தருடன் இனி எனக்கு என்ன தொடர்புண்டு? என்ற பொருள்படும் வகையில், ''விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு'' என்ற பாடலைப் பாடினார். அதை பாடி முடித்ததும், அன்னை அபிராமி அவருக்கு அருட்காட்சி கொடுத்தாள், தன் காதில் அணிந்திருந்த கம்மலை அன்னை அபிராமி கழற்றி எடுத்து வானவீதியில் வீசி எறிந்தாள். அந்த கம்மல் வானில் மிதந்து பலகோடி நிலாக்கள் ஒன்று கூடியது போல் ஒளியைப் பொழிந்தது. அவள் அபராமிபட்டரிடம், நீ வாய் தவறி மன்னனிடம் கூறிய சொல்லையும் மெய்யே என நிரூபித்தேன். நீ தொடங்கிய அந்தாதியை தொடர்ந்து பாடு, என்றாள். அம்பிகை அருள்பெற்ற அபிராமிப்பட்டர் பரவசமுற்றார். அதோடு, தம் அனுபூதி நிலையை வெளிப்படுத்தும் அந்தாதிப் பாடல்களைப் பாடி நிறைவு செய்தார். அபிராமிப்பட்டரின் உறுதியான பக்தி கண்டு சரபோஜி மன்னரும் மகிழ்ந்தார். அபிராமிபட்டரைப் பற்றி பித்தன் என்று கூறியவர்கள் எல்லாம் மன்னிப்பு கேட்டனர். சரபோஜி மன்னர் அபிராமிபட்டருக்கு ஏராளமான மானியம் அளித்தார். அதற்கான பட்டயம் இன்றும் அபிராமி பட்டரின் வாரிசுகளிடம் உள்ளது.

100 விதமான பலன்கள் : அபிராமி அந்தாதியின் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு பலன் தருவதாகச் சொல்கிறார்கள். உதாரணமாக உதிக்கின்ற செங்கதிர் எனத் தொடங்கும் முதல் பாடல் நல்வித்தையும், ஞானமும் தரும் எனவும், நின்றும் இருந்தும் கடந்தும் எனத் தொடங்கும் 10-ஆம் பாடல் மோட்ச சாதனம் பெறவும், தண்ணளிக்கென்று முன்னே பலகோடி எனத்தொடங்கும் 15-ஆம் பாடல் பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெறவும் உதவும் எனக்கூறப்படுகிறது. இப்படியே 100 பாடல்களுக்கும் ஒவ்வொரு பலன் சொல்லப்பட்டுள்ளது.

# SRI PARTHASARATHY SWAMI SABHA (Estd. 1900)

(Address for Communication : 100, T.P. Koil St., Triplicane, Chennai-5)

## 118th YEAR - DANCE FESTIVAL (From 20-1-2018 to 11-3-2018)

## bharat nritya utsav

**at R.K. SWAMY AUDITORIUM (Sir Sivaswamy Kalalaya S.S. School)**
**5, Sundareswarar Street, Mylapore, Chennai – 600 004.**

### Programme Schedule for February 1-15th, 2018

**1.2.2018 ( Thursday )**
5.45 p.m. Bharatanatyam By MANASWINI VISAGAN (Disciple of Guru Roja Kannan )
7.15 p.m. Bharatanatyam By AKSHAYA P. NAIR (Disciple of Guru Archana Magesh)

**2.2.2018 ( Friday )**
5.45 p.m. Bharatanatyam By R. KRITHIGA (Disciple of Guru Jayashree Narayanan)
7.15 p.m. Bharatanatyam By M. RESHMA (Disciple of Guru Lalitha Ganapathy )

**3.2.2018 ( Saturday )**
4.00 p.m. Bharatanatyam By HARSHITHA NANDAKUMAR (Disciple of Guru Rajan Shanmuga Sundaram )
5.45 p.m. Bharatanatyam By R. RAKSHITHA (Disciple of Guru Ramya Rajeshkumar)
7.15 p.m. Bharatanatyam By SHARANYA MURALI (Disciple of Guru Lavanya Shankar )

**4.2.2018 ( Sunday )**
4.00 p.m. Bharatanatyam By ROHINI RAVEENDRAN (Disciple of Guru Vanee Gayathri Bala)
5.45 p.m. Kuchpudi By NITIN (Disciple of Guru Madhavi Namboodri )
7.15 p.m. Bharatanatyam By SOSMITHA (Disciple of Guru Mathula Kishore Kumar)

**5.2.2018 ( Monday )**
5.45 p.m. Bharatanatyam By SMRITHI KRISHNAMOORTHY ( Disciple of Guru Anitha Guha)
7.15 p.m. Bharatanatyam By SRI SUDARSHINI (Disciple of Guru Bragha Bessell)

**6.2.2018 ( Tuesday )**
5.45 p.m. Bharatanatyam By J. SURYANARAYANA MURTHY (Disciple of Dhananjayans )
7.15 p.m. Bharatanatyam By N.V. HARSHIDA, V. VILASINI, A. MADHUMITHA (Disciple of Guru Maalini Balaji )

**7.2.2018 ( Wednesday )**
5.45 p.m. Bharatanatyam By G. ANKITHA ( Disciple of Guru Minal Prabhu)
7.15 p.m. Bharatanatyam By S. ROOPA (Disciple of Guru Divyasena )

**8.2.2018 ( Thursday )**
5.45 p.m. Bharatanatyam By KEERTHANA SUBRAMANIAN (Disciple Guru Kamala Subramanian)
7.15 p.m. Bharatanatyam By VAISHNAVI RAVICHANDRAN (Disciple of Guru Mahalakshmi Aswin )

**9.2.2018 ( Friday )**
5.45 p.m. Bharatanatyam By RANJANA RAVI ( Disciple Guru Srikala Bharath)
7.15 p.m. Bharatanatyam By Abhinaya Saraswathi RAMAA (ADHITHI) VENKAT & SAMYUKTHA RAMAN ( Daughter and Disciples of Smt. Ramaa (Adhithi) Venkat)

**10.2.2018 ( Saturday )**
4.00 p.m. Bharatanatyam By SHRADDHA SRIDHAR (Disciple of Guru Ashwini Viswanathan)
5.45 p.m. Bharatanatyam By DHANUSHREE ( Disciple of Guru Srikala Bharath)
7.15 p.m. Bharatanatyam By SRIMATHI SREEDAR (Disciple of Guru Srikala Bharath )

**11-2-2018 ( Sunday)**
4.00 p.m. Bharatanatyam By N. POOJA (Disciple of Guru L. Narendra Kumar )
5.45 p.m. Bharatanatyam By LAKSHMI RAJESH ( Disciple of Guru Mahalakshmi Aswin )
7.15 p.m. Bharatanatyam By RAMYA PADMANABHAN (Disciple of Guru Lavanya Sankar )

**12-2-2018 ( Monday)**
5.45 p.m. Bharatanatyam By GOPIKA, NAMAGIRI, SMRITHI, G. SHREE NIVEDHITHA ( Disciples of Guru Mathula Kishore Kumar )
7.15 p.m. Bharatanatyam By SHRUTHIPRIYA (Disciple of Guru Nithyakalyani Vaidyanathan )

**13-2-2018 ( Tuesday)**
5.45 p.m. Bharatanatyam By PRANATHI RAMADORAI ( Disciples of Guru Radha)
7.15 p.m. Bharatanatyam By ANU BHASKARARAMAN (Disciple of Guru Seethalakshmi )

**14-2-2018 ( Wednesday)**
5.45 p.m. Mohiniyattam By J.V. MALAVIKA LAKSHMI ( Disciples of Guru Gopika Varma )
7.15 p.m. Bharatanatyam By M. MALAVIKA (Disciple of Guru Sarayu Sai)

**15-2-2018 ( Thursday)**
5.45 p.m. Bharatanatyam By A. AISHWARYA VENKAT & NIVEDITHA DORAISWAMY ( Disciples of Guru Meenakshi Chittaranjan)
7.15 p.m. Bharatanatyam By MEERA BALASUBRAMANIAN (Disciple of Guru Hari Padman )

## All Are Welcome

# NEWS

### MORE BOOM BARRIERS IN COOUM RIVER TO BE COMMISSIONED AT CITY SOON

Preventing plastic waste to enter the sea Chennai corporation set to get more boom barriers in the cooum soon. Already there are 4 boom barriers erected in different places of cooum river in the city which has prevented more than 546 tonnes of municipal solid waste primarily consisting of non-bio gradable plastic from flowing into the sea in two months of this northeast monsoon. The official said " we have started collecting the waste trapped by the boom barriers on a daily basis. From Swamy Sivananda Salai barrier we have collected about 12 to 14 tonnes per day". The boom barriers would be commissioned at more places on the cooum shortly and it will cost Rs.1.05 crore. Plans are also there to commission boom Barriers at Adayar river also after a major study said the official.

### AADHAAR NOT REQUIRED FOR ONLINE ACCESS OF LIC POLICY

On January 19th Life insurance Corporation of India said it will remove the mandatory requirement of providing Aadhaar number for customers to access their policy detail pages saying it was 'inadvertently done' This was done as many customers had raised objections regarding this move of Mandatory of Aadhaar by LIC on twitter.

### SHORTLY ALL POSTAL DEPARTMENTS OPERATION TO GO ONLINE COMPLETELY



To facilitate access to speedy and reliable services across the State and in an effort to become more customer friendly Post offices will soon go entirely online. Now most counter operations, including booking of speed Post is being done manually and updated online later. Once the core System Integrator (CSD) project is introduced customers will have access to real time update of their articles booked from the time of booking to delivery. They can begin to monitor the articles track within minutes of booking. On an average nearly 32.41 crore articles including registered posts, speed posts and articles are being handled in post offices across the State in a year. Among this nearly 4.6 crore mails and articles handled in Chennai post offices alone in a year says a report.

### ISSUANCE OF APPLICATION FOR WORKING WOMEN 2-WHEELERS SUBSIDY STARTED

For working women the Chennai Corporation has invited applications for ' Amma Two –Wheeler scheme'. Effective January 22nd Issuance of application forms for working women two wheeler subsidy started at zonal offices of greater Chennai Corporation. Last date for receipt of filled applications is February 5th 2018 says press release. Under the scheme 2017-18 9,500 working women will be identified for purchase of gearless/auto geared vehicles. A maximum subsidy of 50% of the cost of the two wheeler or Rs.25,000 which is less will be provided for the beneficiary to buy the vehicle of her choice.

### 24% OF GIRLS IN THE AGE GROUP OF 6-17 YEARS IN RURAL AREAS DROP OUT OF SCHOOLS

According to national Family Health Survey-4 24% of girls in rural areas in the age group of 6 to 17years cited lack of interest in studies as the main reason for dropping out of school. The high cost of education was the second most 19% cited the reason. !5% cited required for household, 9% said school being far away from home,8% got married and others cited some unwanted reasons for dropping out schools. 3%said did not get admission and schools are not safe for girls as the reason.

### AMONGST ENGLISH LANGUAGE DAILY NEWS PAPER THE HINDU TOPS THE LIST

Indian Readership Survey 2017 released recently said that The Hindu has retained its undisputed leadership amongst the English Daily News paper in south India with a total leadership of readership of 38.5 lakhs. This is 30% more than the Times Of India with 29.6 lakhs readership. Deccan Chronicle has a readership of 13.8 lakhs. In Tamil Nadu The Hindu readership is 18.8 lakhs which is more than two times to Times Of India's 9.3lakhs. In the city Chennai 8.2 lakhs people are reading The Hindu as against 6.4 lakhs of Times of India says the report. It is noteworthy that The Hindu is the highest priced English daily news paper across markets.

### CHENNAI BOOK FAIR EXHIBITION CONCLUDED ON JAN' 22



The 41st Chennai Book Fair Exhibition-2018 with thousands flocking the stalls every day concluded on Jan' 22nd. The 12 day long fair had over 10 lakh visitors which according to the organisers is the highest recorded so far and the sale of book also significantly increased this year. This year children throng the stalls more to buy comics and the Ponniyin Selvan comics were crowd puller said an organiser.

**FOR ADVERTISEMENT IN MYLAI EXPRESS CONTACT**
**9840643902 / 9884944452**

# KALA SANGAMAM -2018 BY RASA – RAMANA SUNRITYA AALAYA CELEBRATED DELIGHTFULLY






On January 8th evening Kala Sangamam -2018 by Ramana Sunritya Aalaya was celebrated at NaradaGanaSabha Main hall delightfully. Six eminent Artistes presented their skill of music and dance.The event featured the lyrics composed by Master VISHAL ANAND a blessed child with Autism. Dr. Ambika Kameshwar, A real guru shishyaparambara was reflected on the songs the singers sang on that day as the singers sang based on the paramparas of Dr.S. Ramanathan, Sri K.V. Narayanaswamy& Smt. DK Pattammal. The function started with a wonderful carnatic music vocal by Dr.S.Sowmya and party followed by Anuradha Krishnamurthy with a divine voice on the lyrics composed by Vishal. Finally the music concert ended with a captivating music by Dr. NithyashreeMahadevan and party on the composer's songs which was highly applauded. Dr. NityashreeMahadevan also honoured the child VISHAL ANAND with a memento nicely for the enlightment of the child. The Three eminent and veteran Bharatham dancers of today Smt. Revathy Ramachandran inaugurated the dance with a Vinayakar song followed by Rojakannan which was really a feast to the eyes of hall full of rasikas gathered on that day for the function. Bharatham dance concluded with a memorable Bharatham by guruDr.Ambika Kameshwar, with the songs by Vishal Anand who has composed all the songs gloriously for the Kala Sangamam function. The entire function was remarkably organised and the choreography for the Bharatham songs by Dr.Ambika Kameshwar added more richness to the entire function. For more info Contact :044-24957607





## SNAPSHOTS OF SRI PARTHASARATHY SWAMI SABHA DANCE FEST - BHARAT NRITYA UTSAV 2018










1. Bharathanatyam by Kalaivani Rajmohan, New Delhi on 21st January
2. Bharathanatyam by S.Aishwarya Iyer disciple of guru Pandanallur Pandian
3. Kuchupudi by Madhurima naria Hydrabad on 22nd January
4. Bharathanatyam by Aswini Viswanathan disciple of guru Jayanthi Subramaniam on 23rd January @ RK Swamy Auditorium, Mylapore, Ch-4.

Owned and Published by K. Ganesh, No.37/17, 14th trust cross street, Mandavelipakkam, Chennai - 600028 and Printed by M.V.Murugeshan at Sree K.R.R. Press, New No.19, Old No.7, Aziz Mulk 2nd Street, Thousandlight, Chennai - 600 006. Editor: K.Ganesh